


மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்




மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 243 | உள்ளூர் - 31.08.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 243 | வெளியூர் - 01.09.2026 | செவ்வாய்க்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**எப்போதும் மனதில் பயம் தோன்றுகிறதா?** | **இந்திய விமான நிலைய ஆணையத்தில் 389 வேலைவாய்ப்புகள்!** | **செப்.1 முதல் பட்ஜெட்டை பதம் பார்க்கும் அதிரடி மாற்றங்கள்!** | **தமிழக முதல்வரின் முக்கிய அறிவிப்புகள்!**

# உக்ரைன் மீது ரஷ்யா மிகப்பெரிய பதிலடி?



ரஷ்யா, ஆக. 31–

உக்ரைன் கடந்த சில மாதங்களாக ரஷ்யாவின் எண்ணெய் தளங்கள், எரிபொருள் கிடங்குகள் மற்றும் சுத்திகரிப்பு ஆலைகள் மீது நீண்டதூர டிரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தி வருகிறது.

சுமார் 1,200 முதல் 2,500 கி.மீ. தொலைவில் உள்ள இலக்குகளும் தாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சைபீரியாவின் ஓம்ஸ்க் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் தாக்கப்பட்டது.

இதற்கு பதிலடியாக, உக்ரைனின் எரிசக்தி கட்டமைப்புகள் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்த தயாராகி வருவதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதனால் எரிசக்தி மையங்களுக்கு அருகில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லவும், அவசரகால பொருட்களைத் தயார் செய்யவும் தொடங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# முதல்வர் விஜய் அரசு அதிரடி!

# ரூ.55,628 கோடி மெகா திட்டங்கள்!

## ஆவின் பால் விலை ரூ.44 - உற்பத்தியாளர்களுக்கு ஜாக்பாட்!

## காஞ்சி- கோவை - திருச்சி வளர்ச்சிக்கு புதிய வேகம்!



சென்னை, ஆக. 31–

**ஆவின் பால் கொள்முதல் விலை ரூ.44 ஆக உயர்வு!**

தமிழ்நாட்டில் ஆவின் பால் கொள்முதல் விலை லிட்டருக்கு மேலும் ரூ.3 உயர்த்தப்பட்டு ரூ.44 ஆக வழங்க ப்படும் என முதல்வர் விஜய் அறிவித்து ள்ளார். கடந்த ஆகஸ்ட் 19–ல் கொள்மு தல் விலை ரூ.38–ல் இருந்து ரூ.41 ஆக உயர்த்தப்பட்ட நிலையில், பால் உற்பத்தி யாளர்களின் கோரிக்கையை ஏற்று தற்போது மீண்டும் ரூ.3 உயர்த்தப்பட்டு ள்ளது. கறவை மாடுகளுக்கான செலவுகள் அதிகரித்துள்ளதை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்ப ட்டு ள்ளது. இதனால் 3.16 லட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெற உள்ளனர்.

தமிழகத்தில் 8,800 பால் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தினமும் சுமார் 34 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த விலை உயர்வால் அரசுக்கு மாதம் கூடுதலாக ரூ.60 கோடியும், ஆண்டுக்கு ரூ.720 கோடியும்செலவாகும் என முதல்வர் தெரிவித்துள்ளார்.

**3 முக்கிய திட்டங்களுக்கு அறிவிப்பு:**

காஞ்சிபுரம்: மதுரமங்கலத்தில் ரூ.175 கோடியில் செமிகண்டக்டர் மற்றும் மின்னணுவியல் உற்பத்திப் பூங்கா அமைக்கப்படும். இதன் மூலம் சுமார் ரூ.2,000 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 5,000 வேலைவாய்ப்புகள் உருவாகும்.

**கோயம்புத்தூர்:** TIDCO மூலம் ரூ.400 கோடி மதிப்பீட்டில் டிஜிட்டல் நிதி மையம் (FinTech Hub) அமைக்கப்படும்.

நவீன ஆய்வகங்கள், அலுவலகங்கள், புத்தொ ழில் நிறுவனங்கள், பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**திருச்சிராப்பள்ளி:** TIDCO ஆய்வு செய்து திட்ட அறிக்கை தயாரித்த பின்னர், திருச்சிராப்பள்ளி மண்டலத்தில் பல்முனை சரக்குப் போக்குவரத்து மையம் (Multi Model Logistics Hub) அமைக்கப்படும். இதன் மூலம் தொழில் நிறுவனங்கள் மற்றும் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களின் சரக்குப் போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்பட்டு, முதலீடு களை ஈர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**ரூ.55,628 கோடியில் மின்கட்டமைப்பு மேம்பாடு!**

தமிழ்நாட்டின் அதிகரித்து வரும் மின் தேவையை சமாளிக்கும் வகையில், ரூ.33,066 கோடி மதிப்பில் தமிழ்நாடு மின் தொடரமைப்பு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் என முதல்வர் விஜய் அறிவி த்துள்ளார். இதன் கீழ் 196 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு, 15,000 கி.மீ. நீளத்திற்கு புதிய மின் பாதைகள் உருவாக்கப்படும். ஏற்கனவே உள்ள மின் பாதைகளும் வலுப்படுத்தப்படும்.

மேலும், தூத்துக்குடியில் தற்போதுள்ள பழைய அனல் மின் அலகுகளுக்கு மாற்றாக, ரூ.20,800 கோடி மதிப்பில் 1,600 மெகாவாட் திறன் கொண்ட புதிய Supercritical Thermal Power Station PPP முறையில் அமைக்கப்படும். இதில் தலா 800 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அலகுகள் இடம்பெறும்.

சென்னை உள்ளிட்ட பகுதிகளில் மின் விநியோகத்தை வலுப்படுத்த ரூ.1,762 கோடியில் 36 புதிய 33/11 கிலோவோல்ட் துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும். புதிய மின் மாற்றிகள் நிறுவப்படுவதுடன், பழைய கேபிள்கள், மின்கடத்திகள், பில்லர் பாக்ஸ்கள், சர்க்யூட் பிரேக்கர்கள் உள்ளிட்ட உபகரணங்களும் மாற்றப்படும்.

மொத்தத்தில், மின் உற்பத்தி முதல் விநியோகம் வரை கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் இந்த அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

# சேலம் செல்லும் முதல்வர் விஜய்!




சென்னை, ஆக, 31–

காவிரி டெல்டா மாவட்டங்களின் விவசாயப் பாசனத்திற்கான முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் மேட்டூர் அணை, நடப்பு ஆண்டில் திறக்கப்படாதது விமர்சனத்திற்கு உள்ளாகி வருகிறது. குறிப்பாக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12–ஆம் தேதி குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு ஜூன் மாதத் தொட க்கத்தில் அணையில் போதிய நீர் இரு ப்பு இல்லாத காரணத்தால், குறிப்பிட்ட தேதியில் பாசனத்திற்குத் தண்ணீர் திறக்க முடியாத சூழல் நிலவி வந்தது. கர்நாடகாவில் உள்ள கபினி அணையிலிருந்து கடந்த ஒரு வாரக் காலமாக வரலாறு காணாத அளவில் உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதைத் தொடர் நீர்வரத்து காரணமாக, மேட்டூர் அணையின் நீர்மட்டம் மிக வேகமாக உயர்ந்து தற்போது 90 அடியை எட்டியுள்ளது. இதனையொட்டி நடப்பு ஆண்டில் மேட்டூர் அணை வரலாற்றின் 92வது ஆண்டாகக் காவிரி டெல்டா பாசனத்திற்காகத் தண்ணீர் திறக்கப்பட உள்ளது. அதன்படி டெல்டா பாசனத்திற்காக வரும் செப்டம்பர் மாதம் 1ஆம் தேதி மேட்டூர் அணையை முதலமைச்சர் விஜய் திறந்து வைக்கிறார்.

முதலமைச்சரான பின் முதல் முறையாக மேட்டூருக்குச் சென்று முதலமைச்சர் விஜய் அணையைத் திறந்து வைக்க உள்ளது குறிப்பிடத்தக்கது. நீர் திறப்பிற்கான ஆயத்தப் பணிகளை நீர்வளத்துறை அதிகாரிகளும், சேலம் மாவட்ட நிர்வாகமும் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றனர். அணையின் வலது கரை மேல்மட்ட மதகுப் பகுதியில் மின்சார அமைப்புகளைச் சீரமைக்கும் பணியும், முதலமைச்சர் நின்று தண்ணீரைத் திறந்து வைப்பதற்கான பிரத்தியேக மேடை அமைக்கும் பணியும் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இந்நிகழ்வில் கலந்துகொள்ளச் சேலம் மாவட்டம் மேட்டூருக்கு முதலமைச்சர் விஜய் நேரடியாகச் செல்ல உள்ளார்.

இதற்காகத் தனி விமானம் மூலம், செப்டம்பர் 1ஆம் காலை 8 மணி அளவில் சென்னை விமான நிலையத்திலிருந்து புறப்படும் முதலமைச்சர் விஜய், நேரடியாகச் சேலம் விமான நிலையத்தைச் சென்றடைகிறார். அதன் பின்னர் அங்கிருந்து கார் மூலம் புறப்பட்டு மேட்டூருக்குச் செல்லும் முதலமைச்சர் விஜய், காலை 10.30 மணி அளவில் மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசன விவசாயிகளுக்காகத் தண்ணீரைத் திறந்து வைக்க உள்ளார்.

# காஞ்சிபுரம் புது நகரத் திட்டம் ரத்து!




காஞ்சிபுரம், ஆக. 31–

முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் 2023–ல் அறிவிக்கப்பட்ட காஞ்சிபுரம் புதிய நகர மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பாரம்பரியப் பகுதி புனரமைப்புத் திட்டத்தை விஜய் தலைமையிலான தமிழக அரசு ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது. காஞ்சிபுரம் மற்றும் சுற்றியுள்ள 18 கிராமங்களை உள்ளட க்கிய 62.78 சதுர கி.மீ. பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டி ருந்தது. போக்குவரத்து நெரி சலை குறைத்தல், திட்டமிட ப்படாத நகர வளர்ச்சியை முறை ப்படுத்துதல், வரலாற்றுப் பகுதிகளைப் பாதுகாத்தல் ஆகியவை முக்கிய நோக்க ங்களாக இருந்தன. திட்ட த்தை ரத்து செய்ததற்கான முழுமையான காரணம் அரசு உத்தரவில் குறிப்பிடப்ப டவில்லை. இதையடுத்து திருமழிசை, மீஞ்சூர், திரு வள்ளூர், செங்கல்பட்டு, மறை மலைநகர், ஸ்ரீபெரும்பு தூர் உள்ளிட்ட பிற புது நகரத் திட்டங்களின் எதிர்கா லமும் கேள்விக்குறியாகி யுள்ளது.

# ஹோர்முஸ் நீரிணையில் அமெரிக்கா தாக்குதல்!



அமெரிக்கா, ஆக. 31–

ஹோர்முஸ் நீரிணையில் உள்ள ஈரானிய ராக்கெட் ஏவுதளங்கள் மீது அமெரிக்கப் படைகள் மீண்டும் தாக்குதல் நடத்தின.

கடந்த ஒரு மாதத்தில் அமெரிக்கா மேற்கொண்ட முதல் ராணுவ நடவடிக்கை இதுவாகும். லாரக் தீவு அருகே வெடிப்புச் சத்தம் கேட்டதாகவும், தாக்குதலில் உயிரிழப்புகள் மற்றும் காயங்கள் ஏற்பட்டதாகவும் ஈரானின் அதிகா ரப்பூர்வ செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

ஈரானின் புரட்சிகரக் காவல் படையினர் ஹோர்முஸ் நீரிணையை நோக்கி கடல் கண்ணிவெடிகளுடன் கூடிய ராக்கெட்டுகளை ஏவத் தயாராக இருந்ததாகவும், அதைத் தடுக்கும் நோக்கில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அமெரிக்கா தெரிவித்தது.

இதற்குப் பதிலடியாக, ஜோர்தானில் உள்ள கிங் ஹுசைன் மற்றும் அல் அஸ்ராக் அமெரிக்க ராணுவத் தளங்கள் மீது ஈரான் பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவியதாகக் கூறப்படுகிறது. அவற்றில் எட்டு ஏவுகணைகளை இடைமறித்த தாக ஜோர்தான் தெரிவித்தது.

அமெரிக்கா தொடர்ந்து தாக்குதல் நடத்தினால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என ஈரான் எச்சரித்துள்ளது.

இதனால் வளைகுடா பகுதியில் மீண்டும் பதற்றம் அதிகரித்துள்ளது.

# செப்.1 முதல் பட்ஜெட்டை பதம் பார்க்கும் அதிரடி மாற்றங்கள்!




புதுடெல்லி, ஆக. 31–

செப்டம்பர் 1 முதல் பொதும க்களின் வீட்டு பட்ஜெட், பயணம் மற்றும் கார் வாங்கும் செலவில் தாக்கத்தை ஏற்படுத்தும் பல முக்கிய மாற்றங்கள் அமலுக்கு வருகின்றன. எல்பிஜி சிலிண்டர் விலை: ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் சர்வதேச கச்சா எண்ணெய் மற்றும் எல்பிஜி விலை நிலவரத்துக்கு ஏற்ப வீட்டு உபயோக சிலிண்டர் விலை மாற்றப்படும். இதனால் செப்டம்பர் 1 முதல் சிலிண்டர் விலை உயரலாம், குறையலாம் அல்லது மாற்றமின்றியும் இருக்கலாம்.

e–KYC **கட்டாயம்:** வீட்டு உபயோக கேஸ் இணைப்புகளுக்கான e–KYC சரிபார்ப்பை ஆகஸ்ட் 31–க்குள் முடிக்க வேண்டும். தவறினால் செப்டம்பர் முதல் சிலிண்டர் முன்பதிவு செய்வதிலும், மானியம் பெறுவதிலும் சிக்கல் ஏற்படலாம்.

**விமானப் பயணத்தில் மாற்றம்:** வெளிநாடு செல்லும் சர்வதேச பயணிகளின் போர்டிங் பாஸில் இமிகிரேஷன் முத்திரை குத்தும் நடைமுறை செப்டம்பர் 1 முதல் நிறுத்தப்படுகிறது. பயணிகள் மின்னணு போர்டிங் பாஸ் அல்லது அச்சிடப்பட்ட நகலைக் காட்டி நடைமுறைகளை முடிக்கலாம்.

**வருமான வரி தாக்கல்:** குறிப்பிட்ட தொழில் மற்றும் வணிக வருமானம் கொண்டவர்களின் ITR தாக்கல் காலக்கெடு ஆகஸ்ட் 31–ல் முடிவடைந்துள்ளது. இனி தாமதமாக தாக்கல் செய்பவர்கள் அபராதத்துடன் கணக்கு தாக்கல் செய்ய வேண்டும்.

**கார் விலை உயர்வு:** டாடா மோட்டார்ஸ் தனது கார்கள் மற்றும் எஸ்யூவி விலைகளை ரூ.25,000 வரை உயர்த்தியுள்ளது. இந்த உயர்வு பெட்ரோல், டீசல் மற்றும் மின்சார வாகனங்களுக்கும் பொருந்தும்.

# பிரபஞ்ச ரகசியங்களைத் தேடி விண்ணில் பாய்ந்த ‘ரோமன்’!



வாஷிங்டன், ஆக. 31–

புதிய கோள்கள், சூப்பர் நோவாக்கள், விண்மீன் திரள்கள் மற்றும் பிரபஞ்சத்தின் இருள் பொருள், இருள் ஆற்றல் குறித்து ஆய்வு செய்ய நாசா உருவாக்கிய ‘நான்சி கிரேஸ் ரோமன்’ விண்வெளி தொலைநோக்கி வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. சுமார் 3,800 கோடி ரூபாய் மதிப்பிலான இந்த தொலைநோக்கி, நாசாவின் ஹபிள் தொலைநோக்கியை விட 100 மடங்குக்கும் அதிகமான பரப்பை ஆய்வு செய்யும் திறன் கொண்டது. புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பால்கன் ஹெவி ராக்கெட் மூலம் ஏவ ப்பட்ட இது, பூமியில் இருந்து சுமார் 16 லட்சம் கி.மீ. தொலை வில் உள்ள ஆய்வு நிலையை அடைய 3 மாதங்களுக்கும் மேல் ஆகும். அப்பகு தியிலேயே ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியும் செயல்பட்டு வருகிறது.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 31.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 14-ம் தேதி

# ஈரான் போரால் இந்தியாவுக்கு பேரதிர்ச்சி?



அமெரிக்கா–ஈரான் போரின் தாக்கம் உலக நாடுகளை மட்டுமல்ல, இந்தியாவின் பொருளாதாரத்தையும் கடுமையாகப் பாதித்துள்ளதாக Centre for Research on Energy and Clean Air (CREA) அமைப்பின் கணக்கீடு தெரிவிக்கிறது.

ஹார்முஸ் நீரிணை முடக்கப்பட்டதால் கச்சா எண்ணெய், எல்என்ஜி உள்ளிட்ட எரிபொருட்களின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. கடந்த 6 மாதங்களில் உலக நாடுகள் கூடுதலாக சுமார் 330 பில்லியன் டாலர் செலவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதில் இந்தியா மட்டும் சுமார் 22 பில்லியன் டாலர், அதாவது தற்போதைய மதிப்பில் சுமார் ரூ.2.10 லட்சம் கோடிகூடுதல் செலவு செய்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

ஆசிய நாடுகளுக்கான எல்என்ஜி விலை 75 சதவீதமும், ஐரோப்பாவில் 60 சதவீதமும் உயர்ந்துள்ள நிலையில், கச்சா எண்ணெய் விலை 35 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்தியாவுக்கு மிகப்பெரிய சவாலாக எல்என்ஜி இறக்குமதி மாறியுள்ளது. ஹார்முஸ் நீரிணை பிரச்சினையால் மார்ச் மாதத்தில் இந்தியாவின் எல்என்ஜி இறக்குமதி 49 சதவீதம் குறைந்ததாக கூறப்படுகிறது.

இதற்கிடையே அமெரிக்காவிலிருந்து இந்தியா மேற்கொள்ளும் எல்என்ஜி இறக்குமதியின் பங்கு ஏப்ரலில் 8 சதவீதத்திலிருந்து 32 சதவீதமாக உயர்ந்துள்ளது.

போர் முடிவுக்கு வந்தாலும், அதன் பொருளாதார அதிர்வலைகள் இந்திய மக்களின் எரிபொருள் செலவு முதல் பணவீக்கம் வரை எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதே இப்போது எழும் மிகப்பெரிய கேள்வி!

# பிரதமர் வேட்பாளர் விவகாரம்: த.வெ.க. அமைச்சரவையில் இருந்து வெளியேறுவோம் - அமைச்சர் ராஜேஷ் குமார்!



சென்னை, ஆக. 31–

2029–ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் முதலமைச்சர் விஜய் பிரதமர் வேட்பாளராக ஆவார் என்ற கருத்து சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

இதுஒருபக்கம் இருக்க நடைபெற்று வரும் சட்டப்பேரவை கூட்டத்தொடரில் பொதுப்பணி துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசும் போது தமிழ் நாட்டில் இருந்து பிரதமர் உறுவாக வேண்டும் என்று பேசியிருந்தார்.

இதனைத்தொடர்ந்து முதலமைச்சர் விஜய் பிரதமர் வேட்பாளராவார் என்ற கருத்து அதிகளவில் பரவத்தொடங்கியது.

இதனிடையே தனியார் நிறுவனம் நடத்திய அடுத்த பிரதமர் யார்? என்ற கருத்துக்கணிப்பில் முதலமைச்சர் விஜய் 3–ஆம்இடம்பிடித்தது குறிப்பிடத்தக்கது.

இதைத் தொடர்ந்து முதலமைச்சர் விஜய் தான் பிரதமர் வேட்பாளர் என்பது குறித்த விவாதங்கள் சமூக வலைதளங்களில் வலுப்பெற்றது.


இந்த நிலையில், ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக ஏற்காவிட்டல் தவெக அமைச்சரவையில் இருந்து வெளியேறுவோம் என்று அமைச்சர் ராஜேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையில் நடைபெற்ற மேற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஜார்ஜ் ராபின்சன் பதவி ஏற்பு நிகழ்வில் அமைச்சர் ராஜேஷ்குமார் பேசும் போது, "2029 நாடாளுமன்ற தேர்தலில் பாரத பிரதமர் வேட்பாளர் எங்களுடைய தலைவர் ராகுல் காந்தி தான்!

ஒருவேளை தமிழக வெற்றிக் கழகம் இதற்கு உடன்படவில்லை என்றால், தமிழக வெற்றி கழகம் தலைமையிலான அமைச்சரவையில் இருக்கும் இரண்டு அமைச்சர்களும் எங்கள் பொறுப்புகளை துறப்போம்," என்று கூறினார்.

# எப்போதும் மனதில் பயம் தோன்றுகிறதா?





மனதில் காரணமில்லாத பயம், குழப்பம், பதற்றம், தன்னம்பிக்கையின்மை போன்றவை ஏற்படும் போது, ஆஞ்சநேயரை வழிபடுவது மனதிற்கு தைரியத்தையும் நம்பிக்கையையும் அளிக்கும் என்பது ஆன்மிக நம்பிக்கை.

"ஓம் அஞ்சனிசுதாய வித்மஹே
வாயுபுத்ராய தீமஹி
தன்னோ மாருதி ப்ரசோதயாத்"

என்ற ஹனுமான் காயத்ரி மந்திரத்தை தினமும் காலை அல்லது மாலை 11, 27 அல்லது 108 முறை ஜபிக்கலாம்.

மேலும் செய்யக்கூடிய பரிகாரங்கள்:

செவ்வாய்க்கிழமை ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்று வழிபடலாம்.

சனிக்கிழமை எள் எண்ணெய் தீபம் ஏற்றி வழிபடலாம்.

"ஸ்ரீ ராம ஜெயம்" என்று தினமும் எழுதலாம் அல்லது ஜபிக்கலாம்.

அனுமன் சாலிசாவை பக்தியுடன் பாராயணம் செய்யலாம்.

ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை அல்லது வடை மாலை சாத்தி வழிபடுவது பாரம்பரிய வழக்கம்.

கோயிலில் 11 முறை சுற்றி வந்து பிரார்த்தனை செய்யலாம்.

ஏழை, எளியவர்களுக்கு உணவு வழங்குவது போன்ற தானங்களைச் செய்யலாம்.

தினமும் சில நிமிடங்கள் ஆழ்ந்த மூச்சுப் பயிற்சி மற்றும் தியானம் செய்யலாம்.

இவ்வாறு தொடர்ந்து வழிபாடு செய்வதன் மூலம் பயம், குழப்பம் நீங்கி மனத் தெளிவு, தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. இவை ஆன்மிக நம்பிக்கைகளின் அடிப்படையிலான பரிகாரங்கள். தொடர்ந்து அதிகமாக இருக்கும் பயம் அல்லது பதற்றத்திற்கு தகுந்த மருத்துவ ஆலோசனையும் பெறுவது நல்லது.

# ரெயில் பயணிகளின் கவனத்திற்கு..! தெற்கு ரெயில்வே வெளியிட்ட முக்கிய அறிவிப்புகள்!



சென்னை, ஆக. 31–

சென்னை சென்ட்ரல்–ஹவுரா எக்ஸ்பிரஸ் ரெயில் சேவையில் மாற்றம் மற்றும் சிறப்பு ரெயில்கள் நீட்டிப்பு குறித்து தெற்கு ரெயில்வே அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

சென்னை கோட்டத்தில் உள்ள பொடாபாரியா மற்றும் நாயுடுபேட்டை ரெயில் நிலையங்களுக்கு இடையே பராமரிப்பு பணி நடைபெற இருப்பதால் சென்னை சென்ட்ரல்–ஹவுரா எக்ஸ்பிரஸ் ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:–

• சென்னை சென்ட்ரலில் இருந்து இன்று (திங்கட்கிழமை), செப்டம்பர் 3,10 ஆகிய தேதிகளில் இரவு 7 மணிக்கு புறப்படும் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்.12840), அதற்கு மாற்றாக சென்ட்ரலில் இருந்து ஒரு மணி நேரம் தாமதமாக இரவு 8 மணிக்கு புறப்பட்டு ஹவுரா செல்லும்.

• இதேபோல, சென்னை சென்ட்ரலில் இருந்து செப்டம்பர் 5,12 ஆகிய தேதிகளில் இரவு 7 மணிக்கு புறப்படும் எக்ஸ்பிரஸ் ரெயில் (12840), அதற்கு மாற்றாக சென்ட்ரலில் இருந்து 2 மணி நேரம் தாமதமாக, இரவு 9 மணிக்கு புறப்பட்டு ஹவுரா செல்லும்.

ஒடிசா மாநிலம் சம்பல்பூரில் இருந்து வருகிற செப்டம்பர் 9–ந்தேதி முதல் நவம்பர் 25–ந்தேதி வரையில் (புதன்கிழமை மட்டும்) காலை 11.35 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (வண்டி எண்.08311), புறப்பட்டதில் இருந்து 3–வது நாள் அதிகாலை 1.30 மணிக்கு போத்தனூர் சென்றடையும்.

மறுமார்க்கமாக, போத்தனூரில் இருந்து வருகிற செப்டம்பர் 11–ந்தேதி முதல் நவம்பர் 27–ந்தேதி வரையில் (வெள்ளிக்கிழமை மட்டும்) மதியம் 1 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (08312), மறுநாள் இரவு 11.15 மணிக்கு சம்பல்பூர் சென்றடையும்.

உத்தரபிரதேச மாநிலம் கான்பூர் சென்ட்ரலில் இருந்து மதுரை செல்லும் சிறப்பு ரெயில் (வண்டி எண்.01925), வருகிற செப்டம்பர் 2–ந்தேதி முதல் நவம்பர் 25–ந்தேதி வரையில் (புதன்கிழமை மட்டும்) நீட்டிக்கப்பட்டுள்ளது.

மறுமார்க்கமாக, மதுரையில் இருந்து கான்பூர் சென்ட்ரல் செல்லும் சிறப்பு ரெயில் (01926), வருகிற செப்டம்பர் 5–ந்தேதி முதல் நவம்பர் 28–ந்தேதி வரையில் (சனிக்கிழமை மட்டும்) நீட்டிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.

# தி.மு.க.வில் இருந்து விலகிய தோப்பு வெங்கடாசலம்: வேறு கட்சியில் இணைய திட்டமா?



சென்னை, ஆக. 31–

சட்டசபை தேர்தலில் தோல்வி அடைந்த நிலையில் கட்சியில் இருந்து விலகுவதாக கடிதம் மூலம் தோப்பு வெங்கடாசலம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு எழுதியுள்ள கடிதத்தில், என் மீது நம்பிக்கை வைத்து மாவட்ட கழக பொறுப்பாளராகவும் பெருந்து றை சட்டமன்ற தொகுதியின் வேட்பாளராகவும் வாய்ப்பு வழங்கினீர்கள். அதற்கு என்னுடைய நெஞ்சார்ந்த கோடான கோடி நன்றிகளை அன்புடனும் பணிவுடனும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் நான் மாவட்ட கழக செயலாளராக செயல்படுவதற்கும் சட்டசபை தேர்தலில் எனக்கும் என்னுடன் பணியாற்றியவர்களுக்கும் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் எனக்குள் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிற காரணத்தால் இனிமேலும் என்னால் கழகத்தில் பயணிக்க என் மனம் இடம் கொடுக்காத காரணத்தால் எனது அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார். மேலும் தற்போதைக்கு வேறு எந்த கட்சியிலும் இணையும் எண்ணம் இல்லை, முயற்சியும் எடுக்கவில்லை. தற்போதைக்கு வேறு கட்சியில் இணையும் மனநிலையில் இல்லை என செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

முன்பு, அதிமுகவில் இருந்து விலகிய தோப்பு வெங்கடாசலம், திமுக ஈரோடு மத்திய மாவட்ட பொறுப்பாளராக இருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பழனியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு!



பழனி, ஆக. 31–

பழனி மதனீசா முஸ்லிம் உயர்நிலைப் பள்ளியில் 2001–2002 கல்வியாண்டில் 10–ம் வகுப்பு பயின்ற முன்னாள் மாணவ–மாணவிகளின் 25–ஆம் ஆண்டு வெள்ளி விழா மறுசந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மருத்துவர்கள், பொறியாளர்கள், அரசு ஊழியர்கள், தொழிலதிபர்கள் என பல்வேறு துறைகளில் உள்ள முன்னாள் மாணவர்கள் குடும்பத்துடன் பங்கேற்று பள்ளிப் பருவ நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். தங்களுக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கு பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டு இனிப்புகளைப் பரிமாறி மகிழ்ச்சியுடன் விடைபெற்றனர்.

# வெளிநாடுகளில் மருத்துவம் பயின்றோருக்கு தகுதிச்சான்று: விண்ணப்பிக்கலாம்!



சென்னை, ஆக. 31–

வெளிநாடுகளில் மருத்துவம் பயின்றோர் தகுதிச் சான்றிதழ் பெறுவதற்கு செவ்வாய்க்கிழமை (செப்.1) முதல் செப்.30 வரை விண்ணப்பிக்கலாம் என தேசிய மருத்துவ ஆணையம் (என்எம்சி) அறிவித்துள்ளது. இதுதொடர்பாக என்எம்சி செயலர் டாக்டர் ராகவ் லங்கர் வெளியிட்ட அறிவிப்பு: வெளிநாடுகளில் மருத்துவப் படிப்பை நிறைவு செய்தவர்களுக்கான திறனறித் தேர்வு நிகழாண்டு விரைவில் தேசிய தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக, அத்தகையத் தேர்வில் பங்கேற்பதற்கு தேசிய மருத்துவ ஆணையத்தால் வழங்கப்பட்ட தகுதிச் சான்று அவசியம். அவ்வாறு தகுதிச் சான்று இல்லாதவர்கள் அதற்காக விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படுகிறது.

அதன்படி, என்எம்சி இணையதளத்தில் செப்.1 முதல் 30–ஆம் தேதி மாலை 6 மணி வரை விண்ணப்பிக்கலாம். முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கூடுதல் விவரங்களுக்கு என்எம்சி இணையதளத்தை அணுகலாம். ஏற்கெனவே, தகுதிச் சான்று கோரி விண்ணப்பித்திருந்தால் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை. புதிதாக விண்ணப்பிப்பவர்கள் தவறின்றி சுயமாக அதைப் பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# த.வெ.க. சார்பில் போதைப்பொருள் விழிப்புணர்வு மாரத்தான் போட்டி!



திருப்பூர், ஆக. 31–

தமிழக வெற்றிக் கழகம் திருப்பூர் வாலிபாளையம் பகுதி கழகம் 35– வது வார்டு சார்பாக நம் வார்டு நம் பொறுப்பு திட்டம் துவக்க விழா மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு சிங்கப் பெண் 2026–ன் படி முதல்

முறையாக 500 மகளிருக்கான மாரத்தான் போட்டி 35 வது வார்டு செயலாளர் என். பாக்ய லட்சுமி ஏற்பாட்டில் திருப்பூர் வளர்மதி பாலம் அருகே நடைபெற்றது.

மாரத்தான் போட்டியை திருப்பூர் மாநகர் மாவட்ட கழக செயலாளர், தெற்கு எம். எல். ஏ பாலமுருகன் தலைமையில் மாரத்தான் போட்டியை போட்டியை துவக்கிவைத்தார்.

இந்தநிகழ்ச்சியில் ஏராளமான மகளிர் யூனியன் மில் ரோடு, மணியகாரம்பாளையம் வரை சென்று மீண்டும் நிகழ்ச்சி துவங்கப்பட்ட இடத்தில் முடிக்கப்பட்டது.முதல் பரிசை நிவேதா, இரண்டாம் பரிசு மீனாட்சி, மூன்றாம் பரிசு கீர்த்தனா ஆகியோர் பரிசுபெற்றனர்.இந் நிகழ்ச்சியில் வாலி பாளையம் பகுதி செயலாளர் சுபியான், பகுதி கழக இணை செயலாளர் யோகேஷ், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அஸ்வின், வார்டு துணை செயலாளர் குப்புசாமி, இளைஞரணி அமைப்பாளர் சுரேஷ், இணை அமைப்பாளர்கள் சுதாகர், தொண்டரணி அமைப்பாளர் மணிகண்டன், சுதா, மகளிர் அணி இணை அமைப்பாளர் சரண்யா, வார்டு செயற்குழு உறுப்பினர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பழனி அருகே பாலசமுத்திரம் வரதராஜ பெருமாள் கோவிலில் திருக்கல்யாணம்!



பழனி ஆகஸ்ட் 31–

பழனி அருகே உள்ளது பாலசமுத்திரம் இங்கு புகழ் பெற்ற அகோபில வரதராஜ பெருமாள் கோயில் உள்ளது. இந்த கோவிலில் ஆவணி மாத பிரம்மோற்சவ விழா கடந்த 23ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. வரதராஜ பெருமாளுக்கும் ஸ்ரீதேவி பூதேவி ஆகியோருக்கு திருக்கல்யாணம் நடைபெற்றது. முன்னதாக மாலை 5 மணி அளவில் திருக்கல்யாண நிகழ்ச்சிகள் தொடங்கியது. இதையொட்டி சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் நடைபெற்றது. பின்பு வரதராஜ பெருமாளுக்கு மாப்பிள்ளை அலங்காரம் செய்யப்பட்டு வேத மந்திரங்கள் முழங்க ஸ்ரீதேவி பூதேவி ஆகியோருடன் திருக்கல்யாணம் நடைபெற்றது. இதில் மாலை மாற்றுதல், தேங்காய் உருட்டுதல் போன்ற திருமண நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பின்பு நேற்று இரவு வரதராஜன் பெருமாள் ஸ்ரீதேவி பூதேவியுடன் பவளக்கால் சப்பரத்தில் உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதை ஏராளமான பக்தர்கள் கண்டு பயபக்தியுடன் சாமி தரிசனம் செய்தனர் விழா ஏற்பாடுகளை பழனி கோவில் நிர்வாக அதிகாரி பொறுப்பு வெங்கடேசன் செய்திருந்தார்.

# விக்டரி போர் நினைவிடத்தில் புதிய அத்தியாயம்!



சென்னை, ஆக. 31–

முப்படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்பை மேலும் வலுப்படுத்தும் தொடர் முயற்சிகளின் ஒரு பகுதியாக, இந்திய ராணுவத் தலைமையகத்தின் தக்ஷிண் பாரத் ஏரியா சார்பில் சென்னை விக்டரி போர் நினைவிடத்தில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஒளிஒலி காட்சி 29 ஆகஸ்ட் 2026 அன்று நடத்தப்பட்டது.

பொதுமக்களுக்காக முதன்முறையாக நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சிக்கு கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து, இனி ஒவ்வொரு சனிக்கிழமையும் விக்டரி போர் நினைவிடத்தில் பொதுமக்களுக்காக ஒளிஒலி காட்சி நடத்தப்படும்.

இந்த முயற்சியின் மூலம் சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த குடும்பத்தினர், மாணவர்கள், என்.சி.சி. மாணவர்கள், சுற்றுலாப் பயணிகள், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள், இந்தியாவின் ராணுவ வரலாற்றை சுவாரஸ்யமான மற்றும் உணர்வுபூர்வமான முறையில் அறிந்து அனுபவிக்கும் வாய்ப்பைப் பெற உள்ளனர்.

தமிழ் வசனங்களுடன் கூடிய இந்த சிறப்பான ஒளிஒலி காட்சி, தமிழக மக்களுடன் மேலும் ஆழமான தொடர்பை ஏற்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தியாவின் வீரமிக்க ராணுவ வரலாற்றை அதிகமானோர் அறிந்து கொள்ள முடியும்.



பழனி அருகே நெய்க்காரப்பட்டி பள்ளிவாசலில் தீ விபத்து ஏற்பட்டது. இதையொட்டி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் எழுச்சி பாசறை மாநில செயலாளரும், தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின் பழனி மாவட்ட தலைவருமான ஜே,பி,சரவணன் நிதி உதவி வழங்கினார்.



பழனியைச் சேர்ந்த தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினர், மூப்பனார் அவர்களின் 25வது நினைவு நாளில், சென்னையில் உள்ள அவரது நினைவிடத்தில் நினைவு அஞ்சலி செலுத்தினர். நிகழ்ச்சியில் பழனி நகர தலைவர் சண்முகநாதன், மாநில செயலாளர் வழக்கறிஞர் மணிகண்ணன், மாவட்ட இளைஞர் அணி தலைவர் சுந்தரபாண்டியன், மாவட்ட துணைத் தலைவர் கனகசபாபதி ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நலம் நலமறிய..!

மருத்துவ குறிப்புகள்



## புற்றுநோயாளிகளுக்கு H1N1 ஆபத்து அதிகம்! எச்சரிக்கை!



H1N1 பன்றிக்காய்ச்சல், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கு தீவிர பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். குறிப்பாக புற்றுநோயாளிகள், கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை, இம்யூனோதெரபி அல்லது ஸ்டெம்–செல் மாற்று சிகிச்சை பெற்று வருபவர்கள் அதிக ஆபத்தில் உள்ளனர்.

காய்ச்சல், இருமல், தொண்டை வலி, உடல் வலி, தலைவலி, குளிர், அதிக சோர்வு, வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கு இது நிமோனியா, மூச்சுத்திணறல், ஆக்சிஜன் அளவு குறைதல் மற்றும் தீவிர சுவாசப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது. எனவே, அறிகுறிகளை அலட்சியப்படுத்தாமல் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும். கைகளை அடிக்கடி கழுவுதல், நோய்த்தொற்று உள்ளவர்களிடம் இருந்து விலகுதல், கூட்ட நெரிசலைத் தவிர்த்தல் போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியம். காய்ச்சல் தடுப்பூசி தேவையா, எப்போது செலுத்த வேண்டும் என்பதை புற்றுநோய் மருத்துவரின் ஆலோசனையுடன் முடிவு செய்ய வேண்டும்.

# கூட்டணி கட்சிகள் கடும் நெருக்கடி: ஆட்சியில் தொடர இடைத்தேர்தலில் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் த.வெ.க..!



சென்னை, ஆக. 31–

தமிழ்நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற 17–வது சட்டசபை தேர்தலில் த.வெ.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. 12–வது முதல்–அமைச்சராக ஜோசப் விஜய் பொறுப்பேற்றுக்கொண்டார். ஆனால், த.வெ.க.வுக்கு ஆட்சி அமைக்க தேவையான 118 தொகுதிகளில் வெற்றி கிடைக்கவில்லை. த.வெ.க.வுக்கு 107 இடங்களிலேயே வெற்றி கிடைத்த நிலையில், காங்கிரஸ் (5), இந்திய கம்யூனிஸ்டு கட்சி (2), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி (2), விடுதலை சிறுத்தைகள் கட்சி (2), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (2) ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் கூட்டணி ஆட்சி அமைத்துள்ளது. த.வெ.க. அமைச்சரவையில் காங்கிரஸ் (2), விடுதலை சிறுத்தைகள் கட்சி (1), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (1) ஆகியவை இடம்பெற்றுள்ளன.

**கூட்டணி கட்சிகளால் குடைச்சல்**

தமிழகத்தில் த.வெ.க. அரசு அமைந்து 3 மாதங்களே கடந்துள்ள நிலையில், கூட்டணியில் உள்ள கட்சிகள் பல்வேறு வகையில் குடைச்சல் கொடுக்க தொடங்கியிருக்கின்றன. அதாவது, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, விலைவாசி உயர்வை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தியது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, தலைமைச் செயலாளருக்கு எதிராக போர்க்கொடி தூக்கியது. விடுதலை சிறுத்தைகள் கட்சியோ, அரசின் கொள்கை முடிவுகளில், தங்களுடைய கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்க நெருக்கடி கொடுத்து வருகிறது.

தற்போது, காங்கிரஸ் கட்சியும், ராகுல்காந்தியை பிரதமர் வேட்பாளராக ஏற்காவிட்டால் அமைச்சரவையில் இருந்து வெளியேறுவோம் என்றும் மிரட்டி வருகிறது. கூட்டணி கட்சிகள் இவ்வாறு நெருக்கடி கொடுத்து வருவது த.வெ.க. அரசுக்கு புதிய தலைவலியை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே, எதிர்க்கட்சிகளான தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க. ஆகிய கட்சிகள், த.வெ.க. அரசு எப்போது கவிழும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில், கூட்டணி கட்சிகளின் நிலைப்பாடு த.வெ.க. அரசை கவலையடைய செய்துள்ளது.

**இடைத்தேர்தலை சந்திக்க தயாராகும் த.வெ.க.**

ஆட்சியில் தொடர வேண்டும் என்றால், தமிழகத்தில் காலியாக உள்ள 7 தொகுதிகள் இடைத்தேர்தலில் வெற்றி பெற வேண்டிய கட்டாயம் த.வெ.க. அரசுக்கு ஏற்பட்டுள்ளது. கடைசியாக கரூர் தொகுதி காலியானதாக கடந்த ஜூன் மாதம் 30–ந் தேதி அறிவிக்கப்பட்டது. அதிலிருந்து 6 மாதத்திற்குள் இடைத்தேர்தல் நடத்த வேண்டும் என்ற விதிமுறை இருந்தாலும், திருச்சி கிழக்கு, பெருந்துறை, விராலிமலை, கரூர், அம்பாசமுத்திரம் ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றவர்கள் மீது தேர்தல் தொடர்பான வழக்கு நிலுவையில் இருப்பதால், குறிப்பிட்ட காலத்திற்குள் இடைத்தேர்தல் நடைபெறுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

மேற்கண்ட 5 தொகுதிகளில் இடைத்தேர்தல் நடத்துவதற்கான தடை செப்டம்பர் 8–ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதால், மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளிலும் இடைத்தேர்தல் நடத்துவதில் சிக்கல் நீடிக்கிறது. என்றாலும், இடைத்தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ள த.வெ.க., விரைவாக தேர்தலை சந்திக்கவும் தயாராகி வருகிறது.

**முதல்–அமைச்சர் விஜய் பதில் மனு தாக்கல்**

அந்த வகையில், காலியாக உள்ள 7 தொகுதிகளில், 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்த நீதிமன்றம் விதித்த தடையை நீக்கக்கோரி முதல்–அமைச்சர் ஜோசப் விஜய், சென்னை ஐகோர்ட்டில் அவசரமாக பதில் மனு தாக்கல் செய்துள்ளார். இடைத்தேர்தல் நடைபெற வேண்டிய 7 தொகுதிகளுக்கும் தேர்தல் அறிவிக்கப்பட்டு, தேர்தலிலும் அனைத்து தொகுதிகளிலும் த.வெ.க. வெற்றி பெற்றால் மட்டுமே சட்டசபையில் அக்கட்சியின் பலம் 114 ஆக உயரும். இதுவும் பெரும்பான்மைக்கு (118) போதாது என்றாலும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (2), அ.ம.மு.க.வில் இருந்து த.வெ.க.வுக்கு வந்த ஒரு எம்.எல்.ஏ.வின் ஆதரவுடன் ஆட்சியை காப்பாற்றிக்கொள்ள முடியும். எனவே, கூட்டணி கட்சிகளின் எதிர்ப்பை சமாளிக்க, கட்டாயம் வெற்றி என்ற இலக்குடன் இடைத்தேர்தலை சந்திக்க த.வெ.க. தயாராகிவருகிறது. செப்டம்பர் 8–ந் தேதி அதற்கான விடையும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# வேலை வாய்ப்பு

## இந்திய விமான நிலைய ஆணையத்தில் 389 வேலைவாய்ப்புகள்!




நிறுவனம்: Airports Authority of India (AAI)
அறிவிப்பு எண்: 12/2026/CHQ/DR–CBT
பணியிடங்கள்: 389
பணி வகை: மத்திய அரசு நிரந்தரப் பணி
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்பம் தொடக்கம்: 08.08.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 07.09.2026
விண்ணப்பிக்கும் முறை :ஆன்லைன் :https://www.aai.aero/
இணையதளம்: www.aai.aero Airports Authority of India

# குளோபல் ஸ்போர்ட்ஸ் சிட்டி திட்டம் ரத்து இல்லை: அமைச்சர் ஆதவ் அர்ஜுனா!



சென்னை, ஆக. 31–

குளோபல் ஸ்போர்ட்ஸ் சிட்டி திட்டம் முழுமையாக ரத்து செய்யப்படவில்லை; மறு கட்டமைப்பு செய்யப்பட உள்ளது என அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்தார். உலகத் தரத்திலான ஒலிம்பிக் நகரை உருவாக்கும் நோக்கில் திட்டம் செயல்படுத்தப்படும் என்றார். இதற்கு பதிலளித்த உதயநிதி, விளையாட்டு வீரர்களுடன் ஆலோசித்தே இடம் தேர்வு செய்யப்பட்டதாகவும், 3 கட்டங்களாக 25–க்கும் மேற்பட்ட விளையாட்டுகளுக்கான கட்டமைப்புகளை உருவாக்க திட்டமிட்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

# மோசமான வானிலை; அந்தமான் சென்ற விமானம் சென்னை திரும்பியது!

சென்னை, ஆக. 31–

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து அந்தமான் செல்லும் ஆகாசா ஏர்லைன்ஸ் தனியார் விமானம் நேற்று காலை 176 பயணிகளுடன் புறப்பட்டுச் சென்றது. அந்தமான் வான் எல்லையை நெருங்கிய போது அங்கு கடுமையான சூறைக்காற்றுடன் மோசமான வானிலை நிலவியதாக கூறப்படுகிறது.இதனால் விமானம் அந்தமானில் தரை இறங்க முடியாமல் நீண்ட நேர மாக வானில் வட்டமடித்தபடி பறந்து கொண்டிருந்தது. நீண்ட நேரம் ஆகியும் வானிலை சீரடையாததால், மீண்டும் சென்னை விமான நிலையத்துக்கே திரும்பி வந்து தரை இறங்கியது. அந்தமானில் வானிலை சீரடைந்ததும் விமானம் மீண்டும் புறப்பட்டுச் செல்லும் என்று முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனால் வானிலை தொடர்ந்து சீரடையாததால் அந்தமான் செல்லும் விமானம் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து 176 பயணிகளும் இன்று (திங்கட்கிழமை) காலை 9.10 மணிக்கு சென்னையில் இருந்து சிறப்பு விமானம் மூலம் அந்தமான் அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது. இதற்கு பயணிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இரவில் தங்குவதற்கு இடவசதி மற்றும் உணவு உள்ளிட்டவற்றை ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று விமான நிலைய அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில்ஈடுபட்டனர். இதைத்தொடர்ந்து சென்னை நகரில் உள்ள பல்வேறு ஓட்டல்களில் பயணிகளுக்கு தங்கும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் 31 பயணிகள் தாங்கள் வீடுகளுக்குச் சென்று விட்டு, காலையில் விமான நிலையத் துக்கு வருவதாக கூறிவிட்டு சென்றனர்.மீதமுள்ள 145 பயணிகள் சென்னை நகரில் உள்ள பல்வேறு ஓட்டல் களில் தங்க வைக்க அழைத்துச் செல்லப்பட்டனர்.

# கொடியேற்றத்துடன் தொடங்கியது திருச்செந்தூர் முருகன் கோயில் ஆவணித் திருவிழா!



திருச்செந்தூர், ஆக. 31–

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஆவணித் திருவிழா திங்கள்கிழமை அதிகாலை (ஆக. 31) கொடியேற்றத்துடன் கோலாகலமாகத் தொடங்கியது.

சினிமா துளிகள்..!

## ஒரே வாரத்தில் காயடு லோஹரின் 'டபுள் டமாக்கா'.. படங்கள்!




தமிழ் திரையுலகில் 'டிராகன்' திரைப்படம் மூலம் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்த நடிகை காயடு லோஹர், இந்த வாரம் பாக்ஸ் ஆபீஸில் ஒரு அரிய சாதனையை நிகழ்த்த உள்ளார்.

செப்டம்பர் 3 மற்றும் செப்டம்பர் 4 ஆகிய தேதிகளில், அடுத்தடுத்த நாட்களில் இவரது இரண்டு முக்கியத் திரைப்படங்கள் திரைக்கு வரவுள்ளன.

துல்கர் சல்மான் மற்றும் ஜி.வி. பிரகாஷ் குமார் என தென்னிந்தியாவின் முன்னணி நட்சத்திரங்களுடன் இவர் இணைந்து நடித்துள்ள திரைப்படங்கள் ஒரே வாரத்தில் வெளியாவது சினிமா வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

**'ஐ ஆம் கேம்' –செப்டம்பர் 3**

செப்டம்பர் 3–ஆம் தேதி, துல்கர் சல்மான் நடிப்பில் உருவாகியுள்ள பிரம்மாண்ட கேங்ஸ்டர் த்ரில்லர் திரைப்படமான 'ஐ ஆம் கேம்' உலகளவில் வெளியாகிறது.

'RDX' திரைப்படப் புகழ் இயக்குநர் நஹாஸ் ஹிதாயத் இயக்கியுள்ள இத்திரைப்படத்தில் காயடு லோஹர் மிக முக்கியக் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

வேஃபேரர் ஃபிலிம்ஸ் தயாரித்துள்ள இப்படத்தில் ஆண்டனி வர்கீஸ், மிஷ்கின், கதிர் ஆகியோரும் இணைந்து நடித்துள்ளனர்.

**'இம்மார்ட்டல்' – செப்டம்பர் 4**

'ஐ ஆம் கேம்' வெளியான அடுத்த நாளே, அதாவது செப்டம்பர் 4–ஆம் தேதி, ஜி.வி. பிரகாஷ் குமார் – காயடு லோஹர் கூட்டணியில் உருவாகியுள்ள சூப்பர்நேச்சுரல் ஹாரர் திரைப்படமான 'இம்மார்ட்டல்' திரைக்கு வருகிறது.

மாரியப்பன் சின்னா இயக்கத்தில், சாம் சி.எஸ் இசையில் உருவாகியுள்ள இந்த டார்க் ஃபேண்டஸி திரைப்படத்தின் ட்ரைலரை அண்மையில் நடிகர் தனுஷ் வெளியிட்டு ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

**எதிர்பார்ப்பு**

ஒரே வாரத்தில் பேக்–டு–பேக் ரிலீஸாக வெளியாகும் இந்த இரண்டு திரைப்படங்களும் நடிகை காயடு லோஹரின் திரைப்பயணத்தில் மிக முக்கியமான மைல்கல்லாக அமையவுள்ளன. கேங்ஸ்டர் ஆக்ஷன் மற்றும் அமானுஷ்ய ஹாரர் என முற்றிலும் மாறுபட்ட இருவேறு பிரம்மாண்ட கதைக் களங்களில், தென்னிந்தியாவின் முன்னணி நட்சத்திரங்களான துல்கர் சல்மான் மற்றும் ஜி.வி. பிரகாஷ் குமார் ஆகியோருடன் இணைந்து அவர் பாக்ஸ் ஆபீஸில் நிகழ்த்தப்போகும் இந்த 'டபுள் டமாக்கா' அதிரடியைக் காண ஒட்டுமொத்த சினிமா ரசிகர்களும் தற்போது மிகுந்த ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

# 270 பயணிகளுடன் சென்ற படகு கவிழ்ந்ததில் 8 பேர் உயிரிழப்பு!



சைப்ரஸ், ஆக. 31–

இன ரீதியாக பிளவுபட்ட சைப்ரஸின் வடக்குப்பகுதியில், சுமார் 270 பயணிகள் மற்றும் பணியாளர்களுடன் சென்ற படகு ஒன்று கடற்கரைக்கு அப்பால் கவிழ்ந்ததில் குறைந்தது 8 பேர் உயிரிழந்துள்ளதாக துருக்கிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வடக்குப் பகுதியின் துருக்கிய சைப்ரியட் பிரதமர் உனல் உஸ்டெல், துருக்கிய அரசு ஒலிபரப்பு நிறுவனமான டிஆர்டி (TRT)–யிடம் பேசும் போது, இதுவரை 237 பேர் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேலும் 22 பேரை தேடும் பணி நடைபெற்று வருவதாக அதிகாரிகள் கூறினர். மோசமான வானிலை நிலவியதாகவும், புறப்பட்ட 15 நிமிடங்களிலேயே படகிற்குள் நீர் புகத் தொடங்கியதாகவும் உஸ்டெல் கூறினார். அதன்பின் சிறிது நேரத்திலேயே உதவி கோரும் அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். படகு மூழ்கியது குறித்த விசாரணையின் ஒரு பகுதியாக, படகின் கேப்டன் உட்பட எட்டு பேரை காவல்துறையினர் தடுத்து வைத்துள்ளதாக உஸ்டெல் கூறினார். வானிலை நிலைமை "மோசமாக இல்லை" என்று கூறிய துருக்கிய சைப்ரியட் தலைவர் டுஃபான் எர்ஹூர்மன், விபத்துக்கான காரணம் குறித்து ஊகங்களை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். 500 மீட்டர் (1,640 அடி) ஆழமான நீரில் கப்பல் மூழ்கியதால் தேடுதல் பணிகள் சவாலாக உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

துருக்கிய அதிபர் ரெசெப் தையிப் எர்டோகன் தனது இரங்கலை தெரிவித்ததுடன், தேடுதல் மற்றும் மீட்பு பணிகளில் வடக்கு சைப்ரஸ் உடன் தனது அரசாங்கம் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாகவும் கூறினார். அங்காராவில் உள்ள துருக்கிய ராணுவ அகாடமியின் பட்டமளிப்பு விழாவில் ஞாயிற்றுக்கிழமையன்று பேசிய எர்டோகன், "நாங்கள் நல்ல செய்தியை பெறுவோம் என்று நம்புகிறோம்" என்று கூறினார்.

கேட்ரமரன் வகையைச் சேர்ந்த அந்த படகு, கைரேனியா (கிரினே என்றும் அழைக்கப்படுகிறது) துறைமுகத்தில் இருந்து மெர்சின் மாகாணத்தில் உள்ள துருக்கியின் தாசுசு துறைமுகத்திற்கு சென்று கொண்டிருந்தது.

இக்கப்பல் 'பிலோ டெனிஸ்சிலிக்' என்ற படகு நிறுவனத்திற்கு சொந்தமானது என்றும், சைப்ரஸின் வடக்கு கடற்கரையில் உள்ள டயானா கடற்கரைக்கு அப்பால் அது மூழ்கியதாகவும் கைரேனியா மேயர் முராத் சென்குல் தெரிவித்தார்.

# தங்கப்பிரியர்களுக்கு இனிப்பான செய்தி!!

சென்னை, ஆக. 31–

வார தொடக்க நாளான இன்றும் தங்கம் விலை குறைந்துள்ளது. அதன்படி கிராமுக்கு 135 ரூபாய் குறைந்து ஒரு கிராம் 14



ஆயிரத்து 370 ரூபாய்க்கும் சவரனுக்கு 1,080 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 960–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 22–ந்தேதியில் இருந்து இன்று வரை தங்கம் விலை சவரனுக்கு ரூ.4,910 குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. வெள்ளி விலையில் மாற்றமில்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.260–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் விற்பனையாகிறது.

# விண்ணில் பாய்கிறது பூமி கண்காணிப்பு செயற்கைக்கோள்!- இஸ்ரோவின் ஜிஎஸ்எல்வி எப்-17 திட்டம் தயார்!!



பூமி கண்காணிப்பு செயற்கைக்கோளை ஜி.எஸ்.எல்.வி. எப்–17 ராக்கெட்டில் பொருத்தி வருகிற 4–ந்தேதி இஸ்ரோ விண்ணில் ஏவுகிறது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தனது மிகவும் லட்சியமிக்க 'ஜிசாட்–1 ஏ என்று அழைக்கப்பட்ட 'இ.ஒ.எஸ். 5' என்ற பூமி கண்காணிப்பு செயற்கைக்கோளை, 'ஜி.எஸ்.எல்.வி. எப்–17 ராக்கெட்டில் பொருத்தி வருகிற (அதாவது செப்டம்பர்) 4–ந்தேதி அதிகாலை 2.55 மணிக்கு ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள 2–வது ஏவுதளத்தில் இருந்து விண்ணில் ஏவுகிறது.

இது வழக்கமான குறைந்த புவிச் சுற்றுப்பாதைக்கு மாறாக, சுமார் 36 ஆயிரம் கி.மீ உயரத்தில் உள்ள புவி நிலைச் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்படுகிறது. இந்தியத் துணைக்கண்டத்தின் மீது எப்போதும் நிலைத்திருப்பதால், இது இந்தியாவின் நிலப்பரப்பைத் தொடர்ச்சியாகவும், நிகழ்நேரத்திற்கு அருகிலும் படம்பிடித்துக் கண்காணிக்கும். இதில் மல்டி–ஸ்பெக்ட்ரல் மற்றும் ஹைப்பர்–ஸ்பெக்ட்ரல் வகை அதிநவீன கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஜி.எஸ்.எல்.வி. ரகத்தில் இது 19–வது ராக்கெட்டாகும்.

பேரிடர் மேலாண்மை குறிப்பாக வெள்ளம், புயல், நிலச்சரிவு மற்றும் காட்டுத்தீ போன்ற இயற்கை பேரிடர்களை உடனுக்குடன் கண்காணித்து தகவல்களை வழங்கும். பயிர் வளர்ச்சி, காடுகளின் பரப்பளவு மாற்றம் மற்றும் நீர்நிலைகளின் நிலவரத்தை கண்காணிக்க உதவும். இந்தியாவின் எல்லைப் பகுதிகளை தொடர்ச்சியாக கண்காணித்து, நாட்டின் பாதுகாப்பு அமைப்புகளுக்கு தேவையான முக்கியத் தரவுகளை வழங்கும். இது புவிசார் சுற்றுப்பாதையில் இருந்து இந்தியாவை கண்காணிக்கும் நாட்டின் முதல் 'இமேஜிங்' செயற்கைக்கோள் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# மணிப்பூரில் விழிப்புணர்வு பேரணியில் வன்முறை; கண்ணீர் புகை குண்டுகள் வீச்சு- பலர் காயம்!




மணிப்பூர், ஆக. 31–


மணிப்பூரில் நடந்த விழிப்புணர்வு பேரணியில் திடீரென வன்முறை வெடித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில், மக்கள் தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைக்கு முன்னதாக தேசிய குடிமக்கள் பதிவேடு புதுப்பிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி காக்சிங் மாவட்டத்தில் வபகாய், ஹியாங்லாம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான கிராம மக்கள் ஞாயிற்றுக்கிழமை இரவு தீப்பந்தம் ஏந்தி விழிப்புணர்வு பேரணி மேற்கொண்டனர்.

இந்தப் பேரணி காக்சிங் மாவட்ட தலைமையகத்தை நோக்கிச் சென்றபோது, கேராக் அணை பகுதிக்கு அருகில் போலீஸார் போராட்டக்காரர்களைத் தடுத்து நிறுத்தி, திரும்பிச் செல்லுமாறு கேட்டுக்கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அப்போது ஏற்பட்ட பதற்றம் வன்முறையாக மாறியது. போராட்டக்காரர்களில் சிலர் கற்களை வீசித் தாக்குதலில் ஈடுபட்டதால், கூட்டத்தைக் கலைக்கக் போலீஸார் பல கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர்.

இதில் சில போராட்டக்காரர்களுக்கு லேசான காயம் ஏற்பட்டது என்று அதிகாரிகள் மேலும் கூறினர். மணிப்பூரில் மே 2023ஆண்டு முதல் இம்பால் பள்ளத்தாக்கைச் சேர்ந்த மைதேயி சமூகத்தினருக்கும், அதை ஒட்டிய மலைப்பகுதிகளைச் சேர்ந்த குகி சமூகத்தினருக்கும் இடையே ஏற்பட்ட இன வன்முறையில் 260–க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர்.

# நேபாள பெருவெள்ளத்தில் பலி 903-ஆக உயர்வு; 4,250-க்கும் மேற்பட்டோர் மாயம்!



காத்மாண்டு, ஆக. 31–

நேபாள பெருவெள்ளத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 903–ஆக அதிகரித்துள்ளது. 4,250–க்கும் மேற்பட்டோர் நிலை என்ன என்பது இதுவரை தெரியாத சூழலில், அவர்களைத் தேடும் பணி திங்கள்கிழமை ஆறாவது நாளாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாடு "கற்பனை செய்ய முடியாத மற்றும் மனதை உலுக்கும்" ஒரு பேரிடரை எதிர்கொண்டு வருவதாகவும், பேரழிவை ஏற்படுத்திய பெரு வெள்ளத்தின் முழு அளவை மதிப்பிடுவதில் அதிகாரிகள் சிரமப்பட்டு வருவதாக பிரதமர் ஷா சமூக ஊடகப் பதிவு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

திபெத்–நேபாள எல்லையில் பெரும் பனிப்பாறைச் சரிவால் லெண்டே நதியில் கடந்த புதன்கிழமை(ஆக 26) ஏற்பட்ட பெருவெள்ளம், நேபாளத்தின் போடே கோஷி நதியில் சீறிப்பாய்ந்தது. சகதியுடன் பல அடி உயரத்துக்கு பெருக்கெடுத்த வெள்ளத்தில் கரையோர கிராமங்கள், சிறு நகரங்கள் அடியோடு அழிந்தன. வீடுகள், கட்டடங்கள், வாகனங்கள், பாலங்கள், சாலைகள், நீர்மின் நிலையங்கள், இதர உள்கட்டமைப்புகள் அடித்துச் செல்லப்பட்டன. போடே கோஷி நதி வெள்ளம், திரிசூலி, நாராயணி நதிகளிலும் கலந்து பெரும் சேதத்தை விளைவித்தது. ரசுவா, நுவாகோட், சிட்டவான், நவல்பராசி கிழக்கு, நவல்பராசி மேற்கு, கோர்கா, தனாஹு ஆகிய மாவட்டங்களை புரட்டிப் போட்டது.

இந்த பெருவெள்ளத்தில் பலியானோரின் எண்ணிக்கை 903–ஆக உயர்ந்துள்ளதாகவும், 4,250–க்கும் மேற்பட்டோர் நிலை என்ன என்பது இதுவரை தெரியாத சூழலில், அவர்களைத் தேடும் பணியில் மீட்புக் குழுவினர் தொடர்ந்து திங்கள்கிழமை ஆறாவது நாளாக ஈடுபட்டு வருகின்றனர் என தேசிய பேரிடர் அபாய குறைப்பு மற்றும் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட எட்டு மாவட்டங்களிலிருந்தும் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. அதிகபட்சமாக சிட்டவான் மாவட்டத்தில் 272 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

நவல்பராசி கிழக்கு மாவட்டத்தில் 207 உடல்களும், நவல்பராசி மேற்கு மாவட்டத்தில் 151 உடல்களும், கோர்கா மாவட்டத்தில் 62 உடல்களும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல, நுவாகோட் மாவட்டத்தில் 95 உடல்களும், தடிங் மாவட்டத்தில் 55 உடல்களும், தனாஹு மாவட்டத்தில் 37 உடல்களும், ரசுவா மாவட்டத்தில் 24 உடல்களும் மீட்கப்பட்டுள்ளன.

மேலும், 85 பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் 320 வெளிநாட்டினர் உள்பட மொத்தம் 4,247 பேர் காணாமல் போயுள்ளதாகவும் தேசிய பேரிடர் அபாய குறைப்பு மற்றும் மேலாண்மை ஆணையம் கூறியுள்ளது.

திபெத்தில் அதிகாரப்பூர்வமாக 16 பேர் பலியாகியுள்ளதாகவும், 546 பேரின் நிலை என்ன என்பது தெரியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது; அங்கு மீட்புக் குழுவினர் உயிருடன் இருப்பவர்களை கண்டறியப் போராடி வருகின்றனர். பெருவெள்ள பேரிடரில் மாயமானதாகக் கூறப்படும் 4,247 பேரில் நூற்றுக்கணக்கானோர் நேபாள நீர்மின் திட்டங்களில் பணிபுரியும் ஊழியர்களாக என என்று நம்பப்படுகிறது. காணாமல் போனவர்களைத் தேடுவதிலும், சிக்கித் தவிப்பவர்களை மீட்பதிலும் மீட்புக் குழுவினர் தொடர்ந்து போராடி வரும் நிலையில், பாதிக்கப்பட்ட நேபாளத்தின் எட்டு மாவட்டங்களிலிருந்தும் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. திரிசூலி ஆற்றில் ஏற்பட்ட புதிய வெள்ளப்பெருக்கு காரணமாக, மத்திய நேபாளத்தில் இருந்த தொங்கு பாலம் ஒன்று அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்தப் பாலம், கண்டகி மாகாணத்தின் கோர்கா மாவட்டத்தில் உள்ள கண்டகி கிராமப்புற நகராட்சியின் (வார்டு எண் 8) கியால்சோக் பகுதியையும், பிரித்வி நெடுஞ்சாலையில் உள்ள சாரெளடி பகுதியையும் இணைத்தது. சுமார் மூன்று மணி நேரம் நீடித்த வெள்ளப்பெருக்கின்போது, காலை 11.30 மணியளவில் இந்தபாலம் அடித்துச் செல்லப்பட்டது. பாலம் அடித்துச் செல்லப்பட்டதால், கண்டகி கிராமப்புற நகராட்சியின் 7 மற்றும் 8–வது வார்டு பகுதி மக்கள் பிரித்வி நெடுஞ்சாலைக்கான இணைப்பு வசதியை இழந்துள்ளனர்.

திரிசூலி–3ஏ உள்ளிட்ட நீர்மின் நிலையத் திட்டப் பகுதிகளின் சுரங்கப்பாதைகளுக்குள் சிக்கியுள்ள நூற்றுக்கணக்கான மக்களை மீட்கும் முயற்சிகளை நேபாளம் தீவிரப்படுத்தியுள்ளது. இந்திய சுரங்க மீட்பு மற்றும் தடயவியல் நிபுணர்கள், சீனாவைச் சேர்ந்த நிபுணர்கள் உள்ளிட்ட மீட்புக் குழுவினர் அவர்களைத் தொடர்புகொள்ள முயற்சித்து வருகின்றனர்; ஆனால் இதுவரை சுரங்கப்பாதைக்குள்ளிருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

மாயமானவர்களின் நிலை குறித்து அறிய அவர்களின் குடும்பத்தினர் மருத்துவமனைகளில் கண்ணீருடன் காத்திருக்கின்றனர்.

இதற்கிடையே, நேபாள பிரதமர் பாலேந்திர ஷா, நாடு "கற்பனை செய்ய முடியாத மற்றும் மனதை உலுக்கும்" ஒரு இயற்கை பேரிடரை எதிர்கொண்டு வருவதாகவும், பேரழிவை ஏற்படுத்திய வெள்ளத்தின் முழு அளவை மதிப்பிடுவதில் அதிகாரிகள் சிரமப்பட்டு வருவதாக சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார். "ரசுவாபகுதியில் உள்ள போடே கோஷி நதியில் ஏற்பட்ட பேரழிவு பெருவெள்ளம் காரணமாக, உயிர்ச்சேதம், சொத்து மற்றும் உள்கட்டமைப்பு இழப்புகள் குறித்த முழுமையான விவரங்களைச் சேகரிப்பது மிகவும் கடினமாக உள்ளது," என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

மோசமான வானிலை, கடினமான நிலப்பரப்பு மற்றும் தொடர்ந்து நிலவும் ஆபத்துகள் காரணமாக இந்த பணி சவாலானதாக இருந்தாலும், மக்களின் உயிரைப் பாதுகாப்பதில் நாங்கள் உறுதியுடன் செயல்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

# டொராண்டோவில் மோகன் பாகவத்துக்கு உற்சாக வரவேற்பு!




கனடா, ஆக. 31–

கனடாவின் டொராண்டோவில் ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பாகவத்துக்கு ஹிந்து புலம்பெயர் சமூகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

ஆர்எஸ்எஸ் நூற்றாண்டு விழாவையொட்டி அமெரிக்கா, கனடா பயணம் மேற்கொண்டுள்ள மோகன் பாகவத், 'இந்து விஸ்வ பந்து உலகளாவிய நட்பு' நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றினார்.

கனடாவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜேசன் கென்னி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மோகன் பாகவத் வருகைக்கு சில எம்.பி.க்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், கனடா ஹிந்து அமைப்புகள் ஆதரவு தெரிவித்தன.

கனடாவின் 8 மாகாணங்களில் இருந்து 2,500–க்கும் மேற்பட்ட ஹிந்துக்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றதாக தெரிவிக்கப்பட்டது. அமைதி, நல்லிணக்கம், சகோதரத்துவம் மற்றும் உலக ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் நிகழ்வாக இது அமைந்ததாக ஹிந்து சமூகத்தினர் தெரிவித்தனர்.

# 2029 பிரதமர் வேட்பாளர் யார்? தமிழக அரசியலில் உருவான சூறாவளி!



புதுடெல்லி, ஆக. 31–

ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறை இந்தியாவில் விரைவில் கொண்டு வரப்படும், அதனால், வரும் 2029ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலின்போதே அனைத்து மாநிலங்களுக்கும் பேரவைத் தேர்தல் அறிவிக்கப்படலாம் என்ற கருத்துகள் பரவலாக பேசப்பட்டு வருகின்றன.

ஆனால், இது உறுதி செய்யப்படாத நிலையில், அது தொடர்பான பேச்சுகளும், அடுத்த பிரதமர் வேட்பாளர் யார் என்பது குறித்த சர்ச்சைகளும் நாடு முழுவதும் எழுந்துவிட்டதோ இல்லையோ தமிழ்நாட்டில் ஓங்கி ஒலித்து வருகிறது.

கன்னியாகுமரி மேற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜார்ஜ் ராபின்சனின் பதவியேற்பு விழாவில் பங்கேற்ற தமிழக சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேஷ் குமார், வருகிற 2029ஆம் ஆண்டு நடைபெறும் மக்களவைத் தேர்தலில் எங்களுடைய தலைவர் ராகுல் காந்தியே அடுத்த பிரதமராக வருவார்.

ஒருவேளை, ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக தவெக ஏற்றுக்கொள்ளாவிட்டால், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இரண்டு அமைச்சர்களும் தவெக அரசில் அமைச்சர் பதவியில் நீடிக்க மாட்டார்கள். இது எல்லா இடங்களிலும் நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கும் விஷயம்தான், எங்கள் கட்சிதான் எங்களுக்கு பெரியது. கட்சி இல்லாவிட்டால் நாங்கள் ஒன்றுமே கிடையாது. இந்த இயக்கம் என்ன நினைக்கிறதோ, நாளைக்கு இந்தப் பதவியை விட்டுச் செல்ல வேண்டும் என்று சொன்னால், அடுத்த நிமிடமே பதவியை ராஜிநாமா செய்து விடுவோம்.

எனவே, காங்கிரஸ் கட்சியில் இருக்கும் கடைநிலைத் தொண்டருடைய முகம் ராகுல்தான். ராகுல் காந்திதான் பிரதமராக வர வேண்டும். அதை நிறைவேற்றியே தீர்வோம் என்று சபதம் செய்கிறோம் என்று பேசியிருக்கிறார்.

அண்மையில், வரும் 2029 மக்களவைத் தேர்தலில், திமுக தலைமையில் சிஜேபி, ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகள் இணைந்து புதிய கூட்டணி உருவாகுமா என்ற பேச்சுகள் நிலவி வந்தன.

மற்றொரு பக்கம், தமிழ்நாட்டின் முதல்வர் ஜோசப் விஜய்தான் அடுத்த பிரதமர் என்று தவெகவின் சமூக வலைத்தள மீம்ஸ்கள் வெளியாகி விவாதத்துக்குரியதாக மாறியிருக்கிறது.

தமிழக முதல்வர் விஜய் பாகிஸ்தான் சென்றார் என்பது முதல் பல தவறான தகவல்கள் அதுவும் சமூக வலைத்தளத்தில் பரவலாக அறியப்படும் ஹிந்தி பேசும் நபர்கள் மூலம் நாடு முழுவதும் ஹிந்தியில் மீம்ஸ்கள் உருவாக்கப்பட்டு அதனை ஆயிரக்கணக்கானோர் பகிர்ந்தும் வருகிறார்கள். இது தமிழக முதல்வரின் அடுத்தகட்ட நகர்வோ என்றெல்லாம் விவாதிக்கப்பட்டு வருகிறது.

இந்த சமூக வலைத்தள மீம்ஸ்கள் காரணமாகவே, அடுத்த பிரதமர் வேட்பாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்திதான் என்றும், இதனை தவெக ஏற்காவிட்டால் அமைச்சர்கள் பதவி விலகுவோம் என்றும் அமைச்சர் பேசியிருக்கிறார்.

# திமுகவில் 6 லட்சம் பதவிகளுக்கு உள்கட்சித் தேர்தல்!




சென்னை, ஆக. 31–

திமுகவில் வார்டு செயலாளர் முதல் மாவட்டச் செயலாளர் வரை சுமார் 6 லட்சம் கட்சிப் பதவிகளுக்கு உள்கட்சித் தேர்தல் நடைபெற உள்ளது. திமுக அமைப்பு 110 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ள நிலையில், 38 வருவாய் மாவட்டங்களுக்கு தலா 2 பேர் வீதம் 76 பார்வையாளர்கள் ஓரிரு நாள்களில் நியமிக்கப்பட உள்ளனர்.

இவர்கள் புதிய உறுப்பினர் சேர்க்கை, கட்சிப் பதவிகளுக்கான எல்லைப் பிரிப்பு உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வர். டிசம்பர் அல்லது ஜனவரியில் உள்கட்சித் தேர்தல் நடைபெறலாம் என திமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், மாவட்டச் செயலாளர் பதவிக்கான அதிகபட்ச வயது 76 ஆகவும், கிளைச் செயலாளர் பதவிக்கான அதிகபட்ச வயது 45 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நகர, ஒன்றிய செயலாளர் பதவிகளில் ஒருவர் இருமுறை மட்டுமே பதவி வகிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொளத்தூரில் வி.எஸ். பாபு வெற்றியை எதிர்த்து மு.க.ஸ்டாலின் வழக்கு: தீர்ப்புக்காக ஒத்திவைப்பு!



சென்னை, ஆக. 31–

கொளத்தூரில் வி.எஸ். பாபு வெற்றியை எதிர்த்து மு.க. ஸ்டாலின் வழக்கு தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் கொளத்தூர் தொகுதியில் தவெக வேட்பாளர் வி. எஸ். பாபு வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். இதையடுத்து, தொகுதியில் போட்டியிட்டு இரண்டாவது இடத்தை பிடித்த முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அளித்த விண்ணப்பத்தை ஏற்று, கொளத்தூர் தொகுதியில், 14 வாக்குப்பதிவு இயந்திரங்கள், ஒட்டுக்கு ஒப்புகைச் சீட்டு இயந்திரங்கள் சரிபார்க்கப்பட்டன.

அப்போது முறைகேடுகள் நடந்ததாகக் கூறி, முன்னாள் முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முறைகேடுகள் நடந்துள்ளதால் அனைத்து வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வி.வி. பேடுகளை சரி பார்க்க உத்தரவிட வேண்டும் என்றும், தவெக எம்.எல் ஏ – வி.எஸ்.பாபு வெற்றி பெற்றதை செல்லாது என அறிவிக்க வேண்டும் என்றும் தன்னை வெற்றி பெற்றவராக அறிவிக்க வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை அவசர வழக்காக விசாரணைக்கு எடுக்க வேண்டும் என தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி அருள் முருகன் முன்னிலையில், மூத்த வழக்கறிஞர் ஜெ. ரவீந்திரன் கடந்த வாரம் முறையிட்டார். முறையீட்டை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், வழக்கு வரும் திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து இந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் இன்று(திங்கள்கிழமை) தீர்ப்புக்காக ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளது.

# 2028-ம் ஆண்டில் 'டேஸ் ஆஃப் தண்டர் 2-ம் பாகம்' - நடிகர் டாம் குரூஸ்!




டோனி ஸ்காட் இயக்கத்தில் டாம் குரூஸ் நடித்து 1990–ம் ஆண்டு வெளியானத் திரைப்படம், 'டேஸ் ஆஃப் தண்டர்'. இதில் ராபர்ட் டுவால், ராண்டி குவைட், மைக்கேல் ரூக்கர், நிக்கோல் கிட்மேன் மற்றும் கேரி எல்வெஸ் ஆகியோர் நடித்துள்ளனர். கார் ரேஸ் பின்னணியில் உருவான இதில் நிஜ வாழ்க்கை கார் ரேஸ் வீரர்களும் நடித்திருந்தனர்.

கார் ரேஸ் உள்ளிட்ட ஆக்ஷன் காட்சிகள் பாராட்டப்பட்டாலும் இப்படம் வசூல் ரீதியாக பெரிய வெற்றியைப் பெறவில்லை. இப்படத்தின் அடுத்த பாகம் உருவாக இருப்பதாக தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில் அதை டாம் குரூஸ் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார். 36 ஆண்டுகளுக்குப் பிறகு உருவாகும் இதன் இரண்டாம் பாகம், 2028–ம் ஆண்டு ஜூன் 2– ம் தேதி வெளியாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதில் ஹாலிவுட் நடிகை ஆனி ஹாத்வே முதன்மை வேடத்தில் நடிக்கிறார். ஜொனாதன் லெவின் இயக்கும் இப்படத்துக்கு வில்ஸ் டேபிள்ஸ் திரைக்கதை எழுதியுள்ளார். ஜெர்ரி புரூக்ஹைமர் மற்றும் டாம்மி ஹார்பருடன் இணைந்து டாம் குரூஸ் தயாரிக்கிறார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020